பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை 26.09.2023 அதிர்வு 57






# கொட்டும் மழைக்கும் மத்தியிலும் அஞ்சலி

## தியாக தீபம் திலீபனை நினைவேந்த நல்லூரில் திரண்டனர் தமிழ் உறவுகள்



- எஸ்.நிதர்ஷன் -

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழீழம் மலரட்டும்!!" என்று முழக்கமிட்டு - பன்னிரு நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி - தன் உடலை அணு அணுவாக உருக்கி - தாயக மண்ணை முத்தமிட்டு - வீரகாவியம் படைத்த தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் இன்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன. பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் - நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயத்தில் கொட்டும் மழைக்கும் மத்தியிலும் இடம்பெற்றது.

04▶

# தியாக தீபம் திலீபனை நினைவேந்த நல்லூரில் திரண்ட தமிழ் உறவுகள்...






















(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)

# தியாக தீபம் திலீபனை நினைவேந்த நல்லூரில் திரண்ட தமிழ் உறவுகள்...


















(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)




# கொட்டும் மழைக்கும் மத்தியிலும் அஞ்சலி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர் திலீபன் நினைவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் அணிதிரண்டு கொட்டும் மழையில் நனைந்தவாறு தியாக தீபத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில், தியாகி திலீபன் உயிர் பிரிந்த நேரமான காலை 10:48 மணிக்கு, மூன்று மாவீரர்களின் தாயும் நாட்டுப் பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகன் பொதுச்சுடர் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து தியாக தீபத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும், நினைவிடத்துக்கு அருகில் உள்ள திலீபனின் ஆவணக் கண்காட்சி கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அத்துடன் இரண்டு தூக்குக் காவடிகள் நினைவிடத்துக்கு வந்ததுடன், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நினைவிடத்துக்கு 6 இற்கும் மேற்பட்ட தியாக தீபத்தின் ஊர்திப் பவனிகள் வந்தன.

நினைவுச் சுடர் ஏற்றுவதற்கு சுமார் அரை மணி நேரத்துக்கு முன்பாக கடும் மழை பொழிய ஆரம்பித்த போதிலும் மழையையும் பொருட்படுத்தாது, நினைவிடத்தில் ஒன்றுகூடியிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் தியாக தீபத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.











# தடை உத்தரவுகளைத் தாண்டி திருலையில் நினைவேந்தல்!

(அப்துல்சலாம் யாசீம்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு நீதிமன்றத் தடை உத்தரவை மீறியும், பொலிஸாரின் தடைகளைத் தாண்டியும் திருகோணமலையில் இன்று உணர்வெழுச்சியுடன் இடம பெற்றது.

திருகோணமலை – துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குளக்கோட்டன் மண்டபத்தில் பொதுமக்களால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

தமிழ் மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் திருகோணமலை தபால் கந்தோர் வீதியில் அமைந்துள்ள குளக்கோட்டன் மண்டபத்தில் பொதுமக்கள் ஒன்றுகூடி தியாக தீபத்தை நினைவேந்தினர்.திருகோணமலை நீதிமன்றத்தால் பொது அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 பேருக்கு நினைவேந்தல் தடை உத்தரவு விதிக்கப்பட்டிருந்தது. அதற்கான கடிதத்தைப் பொலிஸார் வழங்கிய போதும் தடையாளர்கள் தவிர்ந்த ஏனைய பொதுமக்கள் தியாகி திலீபனின் நினைவேந்தலை நடத்தினர்.

நீதிமன்றத் தடை உத்தரவைப் பாதுகாக்கும் வகையில் பெருந்தொகையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்போதும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும், முன்னாள் போராளிகளும் ஒன்றுகூடி மெழுகுவர்த்தி தீபம் ஏற்றி மலர்கள் தூவி தியாக தீபத்தை நினைவேந்தினர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வீரசேகர விதைத்த வினை

'வினை விதைத்தவன் வினையை அறுத்துத்தானாக வேண்டும்.'

மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதற்கான விசாவை வழங்க அந்நாடு தாமதிப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த விசா தாமதிப்பையொட்டிய விடயங்களில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

தற்போதைய நாடாளுமன்றத்தில் இருபதுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுக்கள் செயல்படுகின்றன. 'யுஎஸ்எயிட்' திட்டத்தின் கீழ் இந்த எல்லா மேற்பார்வைக் குழுக்களின் தலைவர்களுக்கும் ஒரு பத்து நாள் அமெரிக்க சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுலா என்னவோ அடுத்த மாதம் மூன்றாம் வாரத்தில்தான். அதற்கு இன்னும் ஏறத்தாழ ஒரு மாத காலம் உள்ளது. ஆனால் இப்போதே விசா வழங்குவது தாமதமாகும் என்ற தகவல் இலங்கை நாடாளுமன்றத்தின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான மேற்பார்வைக் குழுவின் தலைவர் அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, அவரின் இடத்துக்கு சிறுபான்மை இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரை அமெரிக்கச் சுற்றுலாவுக்கு நியமிக்கும்படி அமெரிக்கத் தரப்பிலிருந்து வழிகாட்டுதல் வழங்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன.

நாடாளுமன்றத்திலும் வெளியிலும் சிறுபான்மையினரைத் துவேஷித்துப் பேசி வரும் பேரினவாதியான சரத் வீரசேகரவுக்கு இந்த நடவடிக்கை மூலம் ஒரு சூடு வைக்கப்பட்டிருக்கின்றது என்பது தெளிவானது.

இந்த மாதம் 19 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதி வரை அமெரிக்காவின் றொட் ஐலண்டில் அமெரிக்கக் கடற்படை யுத்தக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கையின் கடற்படை தளபதியான வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா பங்குபற்றியிருக்கின்றார். அவருக்கு உரிய விசாவும் கௌரவமும் வரவேற்பும் வழங்கிய அமெரிக்கா, இங்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் முன்னாள் கடற்படைத் தளபதி சரத் வீரசேகரவுக்கு அவற்றை வழங்கத் தயாரில்லை என்பதுதான் தெளிவான நிலைமை.

கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ உட்பட சில ருக்கு அவர்களின் யுத்த கால நடவடிக்கைகளை ஒட்டி, விசா வழங்க மறுக்கும் அறிவிப்பை கனடா விடுத்திருந்தது. அதேபோல இங்கு கடற்படைத் தளபதியாக இருந்த அட்மிரல் ஒவ் பிளீட் வசந்த கரனன் கொடவுக்கும் பயணத்தடை விதித்திருந்தது கனடா.

அதேபோல முப்படைகளின் சிரேஷ்ட தளபதி சவேந்திர சில்வாவுக்குப் பயண தடை விதித்துள்ள அமெரிக்கா, அவ்வாறே நல்லாட்சி அரசின் காலத்தில் அமைச்சராக இருந்த முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் விசா வழங்க மறுத்தது. மலேசியாவில் இலங்கையின் பிரதித் தூதுவராகப் பணியாற்றிய முன்னாள் மூத்த இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் உதய பெரேரா 2019 ஓகஸ்டில் வழங்கப்பட்ட அமெரிக்க விசாவை வைத்திருந்த போதிலும், 2021 டிசம்பரில் அமெரிக்காவில் நுழைவதற்கான அனுமதி அவருக்கு மறுக்கப்பட்டது.

இனவாதம் பேசும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு அமெரிக்க விசா வழங்கப்படவில்லை, தாமதிக்கப்படுகின்றது என்பது மட்டும்தான் இப்போது உள்ள நிலைமை. பேரினவாத வெறியில் துள்ளிக் குதிக்கும் அவர் தொடர்பில் அமெரிக்க விசா மறுப்பு, பயண தடை அறிவிப்பு என்பன தொடர்ந்து அமெரிக்கத் தரப்பிலிருந்து வெளிவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் அதற்கான விதையை ஏற்கனவே விதைத்து விட்டுத்தான் அதன் அறுவடைக்கு அவர் காத்திருக்கின்றார்.

## சங்கீத, நடன நுண்கலைமானி விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

யாழ். பல்கலைக்கழக சேர். பொன். இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தால் சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி மற்றும் நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அகுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுள் குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கான விசே தகுதிகளைக் கொண்டிருக்கும் மாணவர்களிடமிருந்து இதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

அதற்கான முடிவுத் திகதி கடந்த 21 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மாணவர்கள் பலரது வேண்டுகோளுக்கு இணங்கத் தகுதியான விண்ணப்பதாரிகளிடம் இருந்து 30 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 12 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார்.



## 2024 வரவு - செலவு யோசனை நவம்பர் 13 இல் நாடாளுமன்றில்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்ட யோசனை எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வரவு – செலவு திட்ட யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வரவு – செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் மாதம் 13 திகதி இடம்பெறவுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய மேலும் தெரிவித்துள்ளார்.

## நுகர்வோர் பாதுகாப்புச் சபையால் பலருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

திருகோணமலையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் பலருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா கச்சக்கொடித்தீவுப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் விலை பட்டியல் காட்சிப்படுதாமல் கீரி சம்பாவை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த நிலையில் 50கிலோ கிராம் அரிசி மூடை மீட்கப்பட்டது.

திருகோணமலை நகரில் விலைப்பட்டியலின்றி விற்பனை செய்த மூன்று கடை உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையின் முன்பாக உள்ள கடையில் மென்பானம் போத்தலில் குறிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்த ஒருவருக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.



# திலீபனின் ஊர்தி, கஜேந்திரன் எம்.பி. மீதான தாக்குதலுக்கு பல்வேறு தரப்பும் கண்டனம்!

தியாக தீபம் திலீபனின் ஊர்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து உலகப் பரப்பிலிருக்கு அரசியல் பிரதிநிதிகளும், தமிழ் புலம்பெயர் அமைப்புகளும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

**ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரின் கண்டனம்**

டென்மார் நாட்டை சேர்ந்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் நிகோலஜ் வில்லும்சென் வெளியிட்டுள்ள கண்டனத்தில்,

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் தமிழ் தோழர்கள் மீதான தாக்குதல் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

உண்ணாவிரதப் போராட்ட வீரர் திலீபனின் உருவப்படத்தை காட்சிப்படுத்திய இரண்டு வாகனங்கள் மீது தீவிரவாத குண்டர் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இது தமிழர்கள் அனுபவிக்கும் அடக்கு முறையைத் தெளிவாகக் காட்டுகிறது. –என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கனடா பிராம்டன் நகரின் மேஜர் கண்டனம்**

கனடா பிராம்டன் நகரின் மேயர் பேட்ரிக் பிரவுன் வெளியிட்டுள்ள கண்டனத்தில்,

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் உள்ளிட்டோர் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இது தமிழ் மக்களுக்கு இறந்தவர்களை நினைவு கூறுவதற்கும் நினைவு கூறுவதற்கும் அவர்களுக்குள்ள உரிமையை மறுக்கின்றது.

இது இலங்கையில் நடைபெற்று வரும் தமிழ் மக்கள் மீதான கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலையின் செயலாகும்.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் கண்டனம்**

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மெக்டோனாக் வெளியிட்டுள்ள கண்டனத்தில்,

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதான தாக்குதலை நான் கண்டிக்க விரும்புகின்றேன்.

இத்தாக்குதல்கள் நடக்கும் போது இலங்கையில் பொலிஸ் தொடர்ந்து பாராமுகமாக இருந்து வருகிறது. சர்வதேச சமூகம் நினைவேந்தல் உரிமையை வலியுறுத்த வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் பிரதிநிதிகளை பாதுகாக்க வேண்டும்.–என்றுள்ளது.

**பின்லாந்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்**

பின்லாந்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுசைன் அல் தாயி வெளியிட்டுள்ள கண்டனத்தில்,

லெப்டினன் கேணல் திலீபனின் நினைவேந்தல் வாகனம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீது சிங்களக் கும்பல் நடத்திய காட்டு மிராண்டித்தனமான தாக்குதலைக் கண்டு நான் மிகவும் கவலையடைந்துள்ளேன்.

சம்பவ இடத்தில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் தாக்குதலைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பின்லாந்து நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனை நான் தனிப்பட்ட முறையில் சந்திக்க நேர்ந்தது. தமிழ் இனப்படுகொலைக்கான தாமதமான பொறுப்புக் கூறல் மற்றும் நீதி மற்றும் அரசின் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்கள் தொடர்பான தமிழ் சமூகத்தின் கடுமையான கவலைகளை அவர் பகிர்ந்து கொண்டார்.

நான் தமிழ் சமூகத்துடன் ஒற்றுமையாக நின்று தமிழ் இனத்தின் நீதிக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் அழைப்பு விடுக்கிறேன். இந்த நேரத்தில் தமிழ் சமூகத்துடன் உறுதியான ஒற்றுமை நடவடிக்கை எடுக்குமாறு சட்டமியற்றுபவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.– என்றுள்ளது.

**பிரான்ஸ் தமிழ் பண்பாட்டு வலயம்**

பிரான்ஸ், தமிழ் பண்பாட்டு வலயம் வெளியிட்டுள்ள கண்டனத்தில்,

இலங்கையில் தியாகி திலீபனின் 36 ஆவது நினைவு தின ஊர்வலத்துக்கு எதிராக சிங்களவர்கள் நடத்திய காட்டு மிராண்டித்தனமான தாக்குதலை தமிழ் பாரம்பரிய வலையமைப்பு–பிரான்ஸ் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

அமைதியான நினைவேந்தல் மற்றும் நாடாளுமன்றத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளான செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருக்கு எதிரான இந்த கொடூரமான மற்றும் சட்டவிரோத தாக்குதல்களை கடுமையாக கண்டிக்குமாறு சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்களை உடனடியாக கேட்டுக்கொள்கிறோம்.

இந்தக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிகளில் பொலிஸார் இருந்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலைத் தடுக்க பொலிஸாரின் செயலற்ற தன்மை, இந்த சிங்கள–பௌத்த தேசியவாத அரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் கூட பாதுகாப்பாக இல்லை என்பதையே காட்டுகிறது. –என்றுள்ளது.

**கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கண்டனம்**

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் சல்மா ஜாஹித் வெளியிட்டுள்ள கண்டனத்தில்,

தமிழ் எம்.பி. உட்பட கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் நினைவேந்தல் ஊர்தி மீது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வன்முறை ஏற்றுக் கொள்ள முடியாதது.

இந்த விடயத்தில் காவல்துறை நடவடிக்கை எடுக்காதது ஏமாற்றம் அளிக்கிறது. அனைவருக்கும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.–என்றுள்ளது.



# சர்வதேச சமாதான தினம் கொழும்பில் அனுஷ்டிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீதி அமைச்சின் கீழுள்ள தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சமாதான தின நிகழ்வு கொழும்பு மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (22) நடைபெற்றது.

இலங்கை சர்வமத தலைவர்கள் மற்றும் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, இலங்கை நாடாளுமன்ற நல்லிணக்கக் குழுவின் தலைவர் டிலான் பெரேரா எம்.பி, அமெரிக்கத் தூதுவர் ஜுலி ஜே சுனாங், நீதி அமைச்சின் செயலாளர் திருமதி வசந்த பெரேரா, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் தலைவர் ஜே.ஜே. ரத்னசிற, நல்லிணக்க அலுவலகத்தின் பணிப்பாளர் தீப்தி லமாஹேவா மற்றும் கௌரவ அதிதிகள், தூதுவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அமெரிக்கத் தூதுவர் ஜுலி ஜே சுன்ங்கின் உரையாற்றும் போது,

சர்வதேச சமாதான தினத்தை உலகம் கொண்டாடி ஒரு நாளுக்குப் பிறகு, இன்று நாம் கூடும் போது, அமைதியைக் கருத்தாகக் கொண்டாடுவது மட்டுமல்லாமல், அதைச் செயற்படுத்துவதற்கு நமக்கு நாமே சவால் விடுவோம்.

குறிப்பாக இலங்கையின் 75 ஆவது சுதந்திரம் மற்றும் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் – வளர்ச்சி, சவால்கள் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் பகிரப்பட்ட பயணத்தை நினைவு கூரும் வேளையில், சிந்திக்கவும் செயற்படவும் இது ஒரு சிறந்த தருணமாகும் என்று தெரிவித்தார்.





# ஆசிய அபிவிருத்தி வங்கியில் விசேட கடன் பெறுவதற்கு முடிவு

## அனுமதி வழங்கியது அமைச்சரவை

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கொள்கை அடிப்படையிலான விசேட கடன் வசதிகளைப் பெற அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 2 துணை வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வீதம் கொள்கை அடிப்படையிலான 2 கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.

அதன் முதலாவது துணை வேலைத் திட்டத்தின் கீழ் நெருக்கடி முகாமைத்துவ பணிவரைபு மற்றும் நிதிப் பிரிவின் உறுதிப்பாட்டை மேம்படுத்தலுக்காக துரித மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இரண்டாவது துணை வேலைத் திட்டத்தின் கீழ் மீள்தகவு கொண்ட அனைத்தையும் உள்ளடக்கிய நிதி முறைமையொன்றைக் கட்டியெழுப்புவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

முதலாவது துணை நிகழ்ச்சித் திட்டத்துக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 2 வீதமான வருடாந்த வட்டி வீதத்தில், 5 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக 25 வருடகால மீள் செலுத்தல் தவணைக் காலத்துக்குக் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தவே தயாரிக்கப்பட்டிருக்கிறது எதிர்ப்பு சட்டமூலம்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷூமாரசிங்க

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துக்கு எதிராகச் சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர். பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தவேண்டும் என்ற கோரிக்கைக்கமையவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சட்ட மூலங்கள் தயாரிக்கப்பட முன்னர் இது தொடர்பாக அனைத்து தரப்பினர்களதும் ஆலோசனைகள் பெறப்பட்டிருக்கின்றன. அந்த ஆலோசனைகளுக்கமையவே நிகழ்நிலை காப்பு சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன .

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷூமாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான ஸ்ரீ கொத்தவில் நேற்று (25) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உலக அரசியலுடன் இணைந்து செல்லக் கூடிய ஒரு தலைவர் ரணில் விக்ரமசிங்கவை தவிர வேறு யாரும் இலங்கையில் இல்லை.

ரணில் விக்ரமசிங்கவின் வெளிநாட்டுக் கொள்கைக்குத் தற்போது பலன் கிடைக்க ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி மேற்கொண்டு சென்ற வெளிநாடுகளில் அங்குள்ள தலைவர்கள் ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத் திட்டங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். நாட்டுக்கு உதவி செய்யவும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

கியூபாவுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு இடம்பெற்ற மாநாட்டில் பிரதான உரை நிகழ்த்த கிடைத்தமை எமக்கு பெரும் கௌரவமாகும்.

கியூபா சோசலிச நாடாகும். அவ்வாறு இருந்தும் எமது நாட்டுத் தலைவருக்கும் அந்த மாநாட்டில் பிரதான உரை நிகழ்த்த கிடைத்தமை எமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை எந்த நாட்டையும் சார்த்ததாக இல்லை என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அதேபோன்று அடுத்ததாக அதிபர் ஜேர்மன் நாட்டுக்கு செல்ல தயாராகி வருகிறார். அங்கு அந்நாட்டு ஜனாதிபதி உட்பட தலைவர்களை சந்தித்து கலந்துரையாட இருக்கிறார்.

இதன் போது நாட்டுக்கு தேவையான உதவிகளையும் பெற்றுக் கொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கிறார். இவ்வாறு வெளிநாட்டு தலைவர்களை நேரடியாக சந்தித்து அவர்களுடன் எமது தேவைகளை சொல்ல முடியுமான ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க என்பது யாரும் அறிந்த விடயமாகும்.

அத்துடன், அரசியல் அனுபவம் உலக நாடுகளுடன் பேச்சுகளை மேற்கொள்ள முடியுமான இலங்கையில் இருக்கும் ஒரே தலைவர் ரணில்தான்.

நாட்டை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் சர்வதேச உதவிகள் கிடைக்க ஆரம்பித்துள்ள சந்தர்ப்பத்தில் அதனை தடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் சில பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றன.

சமூகவலைத்தளங்களை அடக்கி, அரசுக்கு எதிரான கருத்துக்களை பகிர்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நிகழ்நிலை காப்பு சட்டமூலம் ஊடாக நடவடிக்கை எடுத்து வருவதாக பிரசாரம் செய்து வருகின்றனர்.

அவர்களின் கருத்துக்களில் எந்த உண்மையும் இல்லை. மக்களை அரசுக்கு எதிராகத் திசை திருப்பவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

சமூக வலைத்தளங்களை அடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு எந்தத் தேவையும் இல்லை. அவ்வாறு செய்யவும் முடியாது.

சமூக வலைத்தளங்கள் ஊடாகச் சமூக விராரேத செயற்பாடுகள் இடம்பெறுவது, இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை தூண்டும் விடயங்களை பகிர்வதை தடுப்பதற்கு முடியுமான ஒழுங்குவிதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதற்கான நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு இல்லாமல் சமூக வலைத்தலங்களை அடக்குவதற்கு அரசு ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.-என்றார்.

# சவூதியின் 93 ஆவது தேசிய தினம் கொழும்பில்

(அஸ்ஹர் ஆதம் )

சவூதி அரேபியாவின் 93 ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள் நேற்று இரவு (25) கொழும்பில் வெகு விமர்சையாக இடம் பெற்றன.

கோல்பெஸ் விடுதியில் சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், ஆளுநர்கள், அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி மற்றும் இஸ்லாமிய சமூக சேவை இயக்கங்களின் பிரதிதிகள் கலந்து கொண்டனர்.





உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

மனவளக்கலை

**sky Yoga**

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும் **sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள்** (Sky Yoga Foundation Course )



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
**sky Yoga Center**
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607



# விழிப்புணர்வுச் செயலமர்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் கட்டளையாளர்களுக்கான நல்வழிப்படுத்தல் விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்று (25) பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய இடம் பெற்ற நிகழ்வில் போதை பொருள் பாவனையால் ஏற்படும் பாதக விளைவுகள் மற்றும் உளவளம் தொடர்பிலும் விழிப்புணர்வூட்டப்பட்டது.

வளவாளராக கப்பல் துறை சுதேச ஆதார வைத்தியசாலையின் சமுதாய அபிவிருத்தி வைத்தியர் மல்சா ஜெயரட்ண கலந்து கொண்டார்.

இதனை சமூக சேவைகள் கிளையும் சமுதாய அபிவிருத்தி பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர மற்றும் சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# உயர்தர மாணவர்களுக்கு தென்கிழக்கில் செயலமர்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

க.பொ.த.உயர்தர வர்த்தக துறையில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேலும் வலுவூட்டும் வகையிலும், பல்கலைக்கழகங்களுக்கு அத்துறையில் அனுமதி பெறுவதற்கான நுட்பங்களையும் அறிந்து கொள்ளும் வகையிலும் தென்கிழக்கு பல்கலைக் கழக உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் வழிகாட்டலில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் உயர்தர வர்த்தக பிரிவு மாணவர்களுக்கு செயலமர்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் செயலமர்வில் கல்முனை கார்மல் பற்றிமா தேசியக் கல்லூரி, பொத்துவில் முஸ்லிம் தேசியக் கல்லூரி மற்றும் பொத்துவில் அல் இர்பான் மகளிர் கல்லூரி ஆகிவற்றின் மாணவர்களும் துறைசார் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.




# ஒலிம்பியாட் போட்டியில் வென்ற வடக்கு, கிழக்கு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அகில இலங்கை கணித ஒலிம்பியாட் போட்டியில் கிழக்கு மாகாண அணி முதலிடத்தை பெற்றுக் கொண்டது. வட மாகாண கனிஷ்ட பிரிவு அணி இரண்டாமிடத்தை பெற்றுள்ளது.

மீபேயில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 9 பேரைக் கொண்ட மாணவர் அணி வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் குழுமத்தை தெரிவு செய்வதற்காக கொழும்பில் நடைபெற்ற பரீட்சைக்கு தோற்றி பிரிவு 1 (தரம் 6) இல் நாடளாவிய 100 பேரில் மன்னார் வலய மாணவர்கள் மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மன்னார் புனித சேவியர் ஆண்கள் கல்லூரியை சேர்ந்த ஏ. யூ.ஏ.உமர், ஏ.டீ.ஆருஸான், மன்னார் டிலாசால் கல்லூரியை சேர்ந்த ஜீ. டிலோஸன் ஆகி யோரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாவர்.

# சமூக விஞ்ஞானப் போட்டியில் அகில இலங்கையில் முதலிடம்



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் தரம் 12-13 பிரிவில் அநுராதபுர மாவட்டம் கெகிராவை கல்வி வலயத்திலுள்ள கடாண்டுகம ஜாயா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி என்.நஜீரா பர்வின் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

தேசிய மட்டத்தில் பாடசாலைக்கு பெருமையை சேர்த்த இந்த மாணவிக்கும் பெற்றோருக்கும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.



# ஓய்வு நிலையில் பாராட்டு

(அஸ்ஹர் ஆதம்)

25வருட அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றார் மருதமுனையைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் எஸ்.எல்.தௌபீக்.

கல்முனைப் பிரதேச செயகத்தின் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றிய எஸ்.எல்.தௌபீக் தனது 55 வயதில் 25 வருடங்கள் சேவையின் பின்னர் ஓய்வு பெற்றுள்ளார்

இவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று கல்முனை பிரதேச செயலகத்தில் அண்மையில் கிராம உத்தியோகத்தர் எம்.அலாவுதீன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கணக்காளர் எம்.அமீரலி, நிர்வாகக் கிராம உத்தியோகத்தர் எம்.எச்.ஜனுபா அஸ்ஹர் உட்பட கிராம உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகள் பற்றி ஆராய்வு

கிளிநொச்சி மாவட்டத்திற்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று (26) காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இன்றைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மாவட்டத்தின் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் எட்டப்பட்டுள்ளன.

இந்த கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு, போதைப்பொருள் பயன்பாடு உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

விவசாயம், நீர்வழங்கல், கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, கூட்டுறவு, வாழ்வாதாரம், மீன்பிடி, வீதி, காணி, கால்நடை அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், விளையாட்டு உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் , வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்கள், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், வடமாகாண அமைச்சு சார்ந்த திணைக்களங்களின் பணிப்பாளர்கள், ஏனைய திணைக்களங்களின் பணிப்பாளர்கள், இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேசசெயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், மாவட்ட திணைக்களங்கள் சார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டுக் கடனைச் செலுத்த இணக்கத்துக்கு வர வேண்டும்

## சம்பிக்க ரணவக்க எம்.பி. தெரிவிப்பு

வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவது தொடர்பில் நாங்கள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். ஆனால் மாதம் முடிவடைவதற்கு இன்னும் 5 நாள்களே இருக்கின்றன.

இதுவரை எந்த இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை. இணக்கப்பாட்டுக்கு வர முடியாமல் போனால், சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பட்டின் இரண்டாம் கட்டத்துக்கு செல்ல எங்களுக்கு முடியாமல் போகும் அபாயம் இருக்கிறது.

அதனால் எமது நாடு இன்னும் பாதாலத்தில் தொங்கிக் கொண்டுதான் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (25) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

புலனாய்வு தகவல்களை உதாசீனம் செய்யாமல் நடவடிக்கை எடுத்திருந்தால் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை தடுத்திருக்கலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இடம்பெறபோவது குறித்து புலனாய்வு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. அது தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினர் அலட்சியமாக இருந்தனர். இதனாலேயே இந்தச் சம்பவத்தைத் தடுக்க முடியாமல் போனதா என்று பலரும் கேட்கின்றனர்.

அது உண்மை. அவ்வாறானதொரு அச்சுறுத்தலே 2020 மார்ச் 7ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சராகவும் கோத்தாய ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் இருக்கும் போது சர்வதேச நாணய நிதியம் மத்திய வங்கிக்கு விடுத்திருந்தது.

அரசின் பொருளாதாரக் கொள்கை பிழை. தனவந்தர்களுக்கு வரி விலக்களிப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் பிழை. இதனை உடனடியாக சரி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பாரிய நிதி நெருக்கடிக்கு ஆளாகி வங்குரோத்து நிலை அடையும் என இரகசிய கடிதம் ஒன்றை வழங்கி இருந்தது.

ஆனால் அந்த அரசில் இருந்த அமைச்சர்கள் சிலர் நாணய நிதியத்தின் எச்சரிக்கை கடிதம் தொடர்பில் கருத்தில் கொள்ளாமல் வீராப்பு பேசி வந்தார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இல்லாமல் எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என தெரிவித்து வந்தார்கள்.



ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி செப்பனிடும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கும் போது, இதற்குப் பணம் எவ்வாறு பெற்றுக் கொள்வது எனக் கேட்டபோது போதுமானளவு பணம் இருப்பதாக பதிலளித்தார்கள். இறுதியில் நாடு பாதாலத்தில் விழும் வரைக்கும் அவர்களுக்கு தெரியாது.– என்றார்.

# பெண்ணைக் கடத்திச் சென்று கப்பம் பெறுவதற்கு முயன்றனர்

## சந்தேகத்தில் இருவர் கைது

பெண்ணொருவரை கடத்திச் சென்று கப்பம் பெற முயற்சித்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இருவரை மாரவில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, 9 மில்லிமீற்றர் துப்பாக்கி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கட்டுனேரிய – லான்சிகம பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த 24 ஆம் திகதி சிலரால் கடத்தப்பட்டார்.

அந்தப் பெண்ணின் கணவர், தனது மனைவியை சிலர் கடத்திச் சென்றுள்ளனர் என்றும் அவரை விடுவிக்க பணம் வழங்க வேண்டும் என்று கடத்தல்காரர்கள் தன்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும் மாரவில பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.



கடத்தப்பட்ட பெண்ணின் கணவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட மாரவில பொலிஸார், கொச்சிக்கடை – தலுவா கொடுவ பகுதியில் உள்ள வீடொன்றில், கடத்தப்பட்டதாக கூறப்படும் குறித்த பெண்ணை மீட்டுள்ளனர்.அத்துடன், அந்தப் பெண்ணைக் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் நேற்று (25) மாரவில நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இத்தாலியில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி கடத்தப்பட்ட பெண், 8 பேரிடம் தலா 10 லட்சம் ரூபா வீதம் பணம் பெற்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதுவே அந்த பெண் கடத்தப்பட்டமைக்கான காரணமாக இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அவமானத்தால் அழுதவன் மீண்டெழுந்த அதிசயம்!




## ஸ்மித் எனும் ராஜ போதை...

நீங்கள் மாணவராக இருக்கலாம்... அலுவலகத்தில் பணியாற்றலாம்... தொழில் முனைவோராக இருக்கலாம்... உங்கள் கல்லூரியில், அலுவலகத்தில், தொழிலில் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறீர்களா, எல்லோர் முன்னும் கூனிக் குறுகியிருக்கிறீர்களா..? உச்சத்திலிருந்து பல அவமானங்களுடன் அதல பாதாளத்தில் விழுந்து மீண்டும் உச்சம் நோக்கி உயர்ந்து வருவது ஒரு பெரும்போதை... அது ஒரு ராஜபோதை...

ஸ்மித் இப்போது ராஜபோதையில் திளைத்துக்கொண்டிருக்கிறார். நம்மையும் திளைக்கவைக்கிறார்... நம் தோல்விகளை மறந்து வெற்றியை நோக்கி வெறியோடு நகர வைத்துக் கொண்டிருக்கிறார். கடந்த 2018 ஆம் ஆண்டு சிட்னி விமான நிலையத்தில்... பல கோடி கண்களுக்கு முன்... ஒரு சிறுவனைப் போல ஸ்மித்... தேம்பித் தேம்பி அழுதது இன்னமும் மனதைக் கலங்கடிக்கிறது.

2018 இல் ஆஸ்திரேலிய அணி தென் ஆப்பிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடியவேளை மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது பந்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஸ்மித்துக்கு ஐ.சி.சி. ஒரு போட்டியில் விளையாட தடை விதித்தது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் ஸ்மித் மற்றும் வார்னர் ஆகிய இருவருக்கும் ஓராண்டு கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதித்தது. ஸ்மித்தை ஆஸ்திரேலியா கேப்டனாகத் தேர்வு செய்ய இரண்டு ஆண்டுகள் தடையையும் விதித்தது. இந்த போட்டிக்குப் பிறகு ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பிய ஸ்மித் கண்ணீர் மல்க ஒரு பேட்டியை ஊடகங்களுக்கு வழங்கினார்.

'நான் தவறுசெய்துவிட்டேன்... என்னை மன்னித்து விடுங்கள்' என்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டேயிருந்தார். உலகின் முதல்தர பேட்ஸ்மேன் ஸ்டீவ் ஸ்மித். தன் தந்தையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு 'என் குடும்பத்துக்கு எவ்வளவு பெரிய அவமானத்தை ஏற்படுத்திவிட்டேன்... என் நாட்டுக்கு என்னால் அவப்பெயர்... காலம் என்னை மன்னிக்குமா எனத் தெரியவில்லை... சிறுவர்களுக்கு மிகமோசமான முன்னுதாரணமாக ஆகிவிட்டேன்' எனக் குற்ற உணர்வால் குறுகிப்போய், தாழ் உணர்ச்சியால் துவண்டுபோய், அவமானத்தால் மதிப்பிழந்துபோய், தலை குனிந்து நின்ற ஸ்மித்தை கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் கிரிக்கெட் உலகமே பார்த்தது. அவர் மனம் திறந்து அழுத போதும், தவறுக்காக மன்னிப்பு கேட்ட போதும் உலகம் அவரைக் மோசடிக்காரர் என்றே மீண்டும் மீண்டும் அவமானப் படுத்தியது.

கேப்டன்ஸி பறிப்பு... ஓராண்டு காலம் கிரிக்கெட் விளையாடத் தடை... ஒட்டு மொத்த கிரிக்கெட் ரசிகர்கள்முன் குற்றவாளிக் கூண்டு... எல்லாவற்றுக்கும் மேல் எங்கு போனாலும் பின்தொடர்ந்த ஏமாற்றுகாரர் பட்டம்...

கிரிக்கெட் வரலாற்றில் இப்படி ஓர் அவமானத்தை எந்த வீரனும் சந்தித்ததில்லை... ஆனால், அத்தனை அவமானங்களையும் சுமந்தவன்தவர் தடை முடிந்து டெஸ்ட் விளையாட வந்த மூன்றே வாரத்தில்... நான்கே இன்னிங்ஸ்களில் உலகின் முதல்தர பேட்ஸ்மேனாக மீண்டும் உச்சத்தில் உயர்ந்து நின்றார்..

ஸ்டீவன் ஸிமித் 2010 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் பயணத்தைத் தொடங்கினார். ஆரம்பத்தில் சுழல் பந்து வீச்சாளராகக் களம் இறங்கினார். ஆரம்பத்தில் இவரை அணியில் தேர்வு செய்த போது ஆஸ்திரேலியாவில் கடும் விமர்சனங்கள் அந்தக் கால கட்டத்தில் ஏற்பட்டிருந்தன. அந்த விமர்சனங்களுக்குப் பெரிய முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் இவரின் வளர்ச்சி அமைந்திருந்தது.

இவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையின் தொடக்கத்தில் ஏழாம் அல்லது எட்டாவது வீரராகவே துடுப்பெடுத்தாடக் களம் இறங்கினர். அத்துடன் தனது லெக்ஸ்பின் பந்து வீச்சையும் தொடர்ந்து வந்தார்.

2010 , 2011 ஆஷஸ் தொடருக்கு இவர் தேர்வு செய்யப்பட்டார். இந்த ஆஷஸ் தொடரை ஆஸ்திரேலிய அணி இழந்தது. இதனால் இவர் அணியில் தேர்வு செய்யப்பட்டமைக்குப் பல விமர்சனங்கள் எழுந்தன.

இதனால் இத்துடன் இவரின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிடும் என்று கிரிக்கெட் விமர்சகர் மற்றும் பல தரப்பட்டவர்களால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த தொடருக்கு பின்பு ஸ்மித்துக்கு பந்து வீச்சை விட துடுப்பாட்டதிறன் நன்றாக இருப்பதாக சிலர் கருத்துக்களை தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து ஸ்மித் தனது துடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்த தொடங்கியவர் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு இங்கிலாந்து நடைபெற்ற ஆஷஸ் தொடரின் ஸ்மித் தெரிவு செய்யப்பட்டார். அந்த தொடரை ஆஸ்திரேலியா அணி இழந்து இருந்தாலும் ஸ்மித் தனது சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார்.

எனவே அதேஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் தொடரிலும் ஸிமித் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். குறிப்பாக மெல்பன் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சதம் அடித்து ஆஸ்திரேலியா போட்டியை வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தார். மேலும் ஆஸ்திரேலியா ஆஷஸ் தொடரை வெல்ல முக்கிய காரணமாகவும் அமைந்திருந்தார். இதனைத் தொடர்ந்து இந்திய அணி ஆஸ்திரேலிய சுற்று பயணம் மேற்கொண்டிருந்த போது அசத்தலாக ஆடி ரன் மழை பொழிந்தார்.

இந்தத் தொடருக்கு பின் சறுக்கல்

**(15ஆம் பக்கம் பார்க்க)**

# அவமானத்தால் அழுதவன்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையே சந்திக்கவில்லை இவர் அனைத்து நாடுகளிலும் ரன் வேட்டையை தொடர்ந்தார். பொதுவாக ஆஸ்திரேலியா வீரர்கள் சுழல் பந்து வீச்சை எதிர்கொள்வதில் சிரமப்படு வார்கள். ஆனால் மாறாக ஸ்மித் சிறந்த முறையில் சுழல் பந்து வீச்சாளர்களும் எதிர் கொண்டார். இதற்கு 2016 ஆஷஸ் தொடர் மற்றும் 2017 இந்திய சுற்றுப் பயணம் சிறந்த சான்றாக அமைந்தது. குறிப்பாக 2017 இந்திய சுற்றுப் பய ணத்தின் போது புனேவில் ஆடிய ஆட் டம் அனைத்து கிரிக்கெட் ரசிகர்களையும் பிரமிக்க வைத்தது. முற்று முழுதாக சுழலுக்கு சாதகமான ஒரு ஆடுகளத்தில் அதுவும் உலகத்தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக சதம் கடந்திருந்தார். மற்றும் அந்த போட்டி யில் ஆஸ்திரேலியா அணியை வெற்றி பெறவும் வைத்திருந்தார்.

2015 ஆஷஸ் தொடரின் போது இங்கிலாந்து லாட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இரட்டை சதம் அடித்து அசத்தினார். 2015 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா அணியின் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக் கான கேப்டனாக ஸ்மித் அறிவிக்கப் பட்டார். கேப்டனாக டெஸ்ட்போட்டி பய ணத்தில் சிறந்து விளங்கினார். ஆஸ்தி ரேலியாவின் கேப்டனாக 34 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஸ்மித் 3659 ரன்கள் மற்றும் 15 சதங்கள் 13 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 70.36 என்னும் சராசரியுடன் அடித்து அசத்தியுள்ளார்.

இவ்வாறு சிறப்பாக சென்று கொண டிருந்த ஸ்மித்தின் கிரிக்கெட் பயணத் தில் மிகவும் மோசமான நிகழ்வு ஒன்று நடைபெற்றது. அது இவரின் கிரிக்கெட் வாழ்க்கையை புரட்டிப் போட்டது 2018 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அணி தென் ஆப்பிரிக்காவுக்குச் சுற்றுப் பய ணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி வந்தது. மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது பந்தை சேதப் படுத்திய குற்றச்சாட்டில் ஸ்மித்துக்கு ஐ.சி.சி. ஒரு போட்டியில் விளையாட தடை விதித்தது. ஆஸ்திரேலிய கிரிக் கெட் வாரியம் ஸ்மித் மற்றும் வார்னர் ஆகிய இருவருக்கும் ஓராண்டு கிரிக் கெட் போட்டிகளில் பங்கேற்க தடை விதித்தது ஸ்மித்தை ஆஸ்திரேலியா கேப்டனாக தேர்வு செய்ய இரண்டு ஆண்டுகள் தடையையும் விதித்தது.

இந்த தடைக்காலத்துக்குப் பிறகு டெஸ்ட்டில் ஸ்மித்தின் மீள் வருகைக்காக குறிக்கப்பட்ட இடம்தான் இங்கிலாந்து. பரம எதிரியின் களம். ஆஷஸ் எனும் கூடுதல் உஷ்ணம். ஏமாற்றுக்காரன் என்னும் கேலிக் குரலால் வீழ்த்திவிடத் துடித்த இங்கிலாந்து ரசிகர்கள். இதை எதையுமே கண்டு கொள்ளவில்லை ஸ்மித்.

ஏழு இன்னிங்ஸ்களில் 774 ரன் களை அடித்து தனது மீள் வருகையை கிரிக்கெட் உலகததுக்குத் தெரிவித்தார். இதில் மூன்று சதம், ஒரு இரட்டை சதம் என அத்தியிருந்தார். மீண்டும் உலகின் நம்பர் 1 பேட்ஸ்மேன் என்கிற பட்டம். Yes... Steve Smith is back என அவரது ரசிகர்களும் பொதுவான கிரிக்கெட் ரசிகர்களும் கொண்டாட தொடங்கினர்.

இவ்வாறாக தனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்கத் தொடங்கினார். தொடர்ந்து ஆஸ்திரே லியாவின் முக்கிய துடுப்பாட்ட வீரராக தனது பயணத்தை தொடர்ந்து கொண்டி ருக்கும் ஸ்மித் சமீபத்தில் நடைபெற்ற உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொள்வதற்கு ஸ்மித் விளாசிய சதம் மிக முக்கிய பங் களிப்பை வழங்கியது.

தொடர்ந்து இங்கிலாந்தில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் ஆஷஸ் தொடரிலும் ஸ்மித் தனது பங்களிப்பை வழங்கியிருந்தார். தொடர்ந்து முதல்தர துடுப்பாட்ட வீரராக திகழ்ந்துவரும் ஸ்மித் அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெற இருக்கின்ற ஒரு நாள் உலகக் கிண்ணத்தை தனது துடுப்பாட் டத்தில் மூலமாக ஆஸ்திரேலியாவுக்கு வென்று கொடுப்பாரா என்பதே ரசிகர் களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

கிரிக்கெட் ரசிகர்களின் வாழ்வில் இது ஓர் உன்னதமான காலம். உலகின் மிகப்பெரிய, மிகச்சிறந்த, மிகமுக்கிய மான பேட்ஸ்மேனின் ஆட்டத்தை சமகாலத்தில் பார்த்து ரசிக்கும் வாய்ப்பு. ஸ்மித் ராஜ போதையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மகிழ்ந்திருப்போம்

**மகேஸ்வரன் கலைச்செல்வன்,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# மன்னார் சுகாதார பொறுப்பு வைத்தியர் அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு

(சியாத்.எம்.இஸ்மாயில் )

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலைக்கு மன்னார் மாவட்ட பொது வைத் தியசாலையின் சுகாதார தர பாதுகாப்பு பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.ஐ.எம். றிபாஸ் உள்ளிட்ட வைத்தியசாலை குழுவினர் (23) விஜயம் மேற்கொண்டிருந்தனர்.




வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரிகளான டாக்டர்கள்.எம்.எம்.தாஸிம், எம்.எச்.எம்.சனூபர்,எஸ். அகிலன் மற்றும் தாதிய பரிபாலகர் பி.ரி.நௌபர், நிர்வாக உத்தியோகத்தர் கே.விஜயகுமார் , வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை உத் தியோகத்தர்கள் உள்ளிட்டோர்கள் வர வேற்றனர்.




வைத்தியசாலைக் கழிவு முகாமைத்துவம் மற்றும் ஏனைய வைத்தியசாலை பிரிவுக ளையும் வருகை தந்தோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இங்கு களவிஜயம் மேற்கொண்டோருக்கு வைத்திய அத்தியட்சகர் டாக்டர். றீ.எஸ்.ஆர். றீ.ஆர்.றஜாப் நன்றிகளைத் தெரிவித்தார்.

கள விஜயத்தின் நினைவாக, ஞாபகச் சின்னம் வழங்கப்பட்டது.





# தியாக தீபம் திலீபனுக்கு மன்னாரில் அஞ்சலி

(மன்னார் நிருபர்)

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தமிழர் தாயகப் பகுதிகள் மற்றும் புலம்பெயர் நாடுகளிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னாரில் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (26) காலை நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தேசிய உணர்வாளர்கள், நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் இணைந்து மலர் அஞ்சலி செலுத்தினர்.



நினைவேந்தல் நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் பரஞ்சோதி, மன்னார் நகரசபையின் முன்னாள் உப தவிசாளர் ஜான்சன் உட்பட பொதுமக்கள் பலர் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டு தியாக தீபம் திலீபனுக்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# நிந்தவூர் கோட்டத்துக்கு புதிய அதிகாரி நியமனம்



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய, நிந்தவூர் கோட்டத்துக்குப் புதிய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை கல்வி வலயத்தின் உடற்கல்வி பாட உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம்.சாஜித் இன்று (26) நிந்தவூர் கோட்டக்கல்வி பணிமனையில் வைத்து ஓய்வு பெற்று செல்லும் முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி எம். சரிப்தீன் அவர்களிடமிருந்து தமது கடமைகளை பெறுப்பேற்று கொண்டார்.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள் முன்னிலையில் யூ.எல்.எம். சாஜித் தனது கடமைகளை பெறுப்பேற்று கொண்டார்.



# சுகாதாரப் பிரச்சினை பற்றிய பிரேரணை கையளிப்பு

(எஸ். சினீஸ் கான்)

சுகாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் முன்வைத்துள்ள குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளுடன் கூடிய எட்டு பிரேரணையின் பிரதியொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அதன் ஊடக பேச்சாளர் வைத்தியர் சமில், உதவி செயலாளர் பிரபாத், வைத்தியர் வசந்த ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரிடம் நேற்று திங்கட்கிழமை (25) இதனைக் கையளித்துள்ளனர்.





# உணவுக் கண்காட்சி

(நூருல் ஹுதா உமர் )

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் பல்லின மதத்தவர்களின் பண்டிகைகால உணவுக் கண்காட்சி நேற்று (25) நடைபெற்றது.

தரம் 3 பாடவிதானத்தில் காணப்படும் ‘பல்லின மதத்தவர்களின் பண்டிகைகால உணவுகளை செயற்பாட்டு ரீதியாகக் காட்சிப்படுத்தல்’ எனும் தொனிப் பொருளில் இக்கண்காட்சியை தரம் 3 பகுதித் தலைவர் மற்றும் வகுப்பாசிரியைகள் இணைந்து பெற்றோரின் பங்களிப்புடன் ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் கல்முனை ஸாஹிறா கல்லூரி முன்னாள் அதிபர் ஹம்ஸா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அல்-ஹிலால் வித்தியாலய அதிபர் நஸார் விஷேட விருந்தினராகவும், இப்பாடசாலையின் பிரதி அதிபர்களான நுஸ்ரத் பேகம் மற்றும் ஷெறோன் டில்றாஸ் சிறப்பு விருந்தினராகவும் மேலும் தரம் 5 பகுதித் தலைவர் ஜஹ்பர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் காணப்படும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு இனத்தவர்களும் தமது பண்டிகைக்காலத்தின் போது பரிமாறும் பாரம்பரிய, கிராமிய மற்றும் துரித என பல்வேறுபட்ட உணவுகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

# பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை!

# பழனிசாமியின் அறிவிப்பால் பரபரப்பு





இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குகிறது. இந்த நிலையில், மத்தியில் உள்ள பாரதீய ஜனதா கட்சியுடனான கூட்டணியை முடிவுக்கு கொண்டுவருகிறோம் என எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு தமிழ் நாட்டு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஏனைய கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட அ.தி.மு.க முடிவு செய்துள்ளதை அ.தி.மு.க தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடி வருகின்றனர்.

தமிழ் நாட்டு சட்டப் பேரவை தேர்தலில் அ.தி.மு.க உடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட பாரதீய ஜனதா கட்சி நான்கு தொகுதிகளை கைப்பற்றிய போதிலும் அதன் பின்னர் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி இடையே மோதல் போக்கு நிலவிவந்தது.

குறிப்பாக பாரதீய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்ட அண்ணாமலை, அ.தி.மு.கவின் மறைந்த தலைவர்களான அறிஞர் அண்ணா மற்றும் ஜெயலலிதா ஆகியோரை விமர்சித்ததை அடுத்து மோதலானது உச்சத்திற்கு சென்றிருந்தது.

அ.தி.மு.க தலைவர்கள் அண்ணாமலையை கடுமையாக விமர்சித்தனர். வார்த்தைப் போரின் உச்சக் கட்டமாக பாரதீய ஜனதா கட்சியுடனான கூட்டணியில் இருந்து அ.தி.மு.க விலகுகிறது என முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து டெல்லிக்கு சென்றிருந்த அ.தி.மு.கவின் மூத்த தலைவர்களும் முன்னாள் அமைச்சர்களும் பாரதீய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி. நட்டாவை சந்தித்து, அண்ணாமலையை நீக்க வேண்டும் எனவும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

எனினும் அ.தி.மு.க. தலைவர்களின் குற்றச்சாட்டை மாத்திரமல்லாமல், அண்ணாமலையை மாற்றுமாறு விடுத்த கோரிக்கையையும் ஜே.பி.நட்டா ஏற்கவில்லை. அண்ணாமலை விவகாரத்தில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது எனவும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அ.தி.மு.க. கழகப் பொதுச்செயலாளரும், எதிர்க் கட்சித் தலைவருமான முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, நேற்று பிற்பகல் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை அவசரமாக கூட்டியிருந்தார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் பின்னர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அ.தி.மு.க. தலைமைக் கழகம், பாரதீய ஜனதா கட்சியுட னான கூட்டணியை முடிவுக்கு கொண்டுவருகிறோம் என்று அறிவித்துள்ளது.

அத்துடன், பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்தும் விலகிக் கொள்வதாக அ.தி.மு.கவின் தலைமை கழகம் அறிவித்துள்ளமை தமிழ் நாட்டு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அ.தி.மு.கவின் இரண்டு கோடி தொண்டர்களின் எண்ணத்திற்கும், விருப்பத்திற்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து பாரதீய ஜனதா கட்சியில் இருந்து விலகுவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என கழகத்தின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# பெங்களூர் முழுவதும் முடங்கியது: தமிழக எல்லையில் தீவிர கண்காணிப்பு

தமிழகத்துக்கு காவிரி நீர் திறக்கப் பட்டதைக் கண்டித்து பெங்களூரில் இன்று முழு அடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் தமிழக அரசுப் பேருந்துகள் அத்திப்பள்ளி சோதனை சாவடி வரை இயக்கப்படுகின்றன. தமிழகத்தில் இருந்து சென்ற பேருந்துகள், வாகனங்கள் பல நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இரு மாநிலங்களுக்கும் இடையேயான போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெங்களூரில் தமிழர் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி ஒழுங்காற்று குழு ஆகியவை தமிழகத்துக்கு 5,000 கனஅடி நீரை திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டன. இந்த உத்தரவுக்கு தடை



விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதனால், தமிழகத்துக்கு காவிரிநீரை கர்நாடக அரசு திறந்துவிட்டுள்ளது.

இதைக் கண்டித்து கர்நாடக நீர்பாதுகாப்பு குழு சார்பில் நடத்தப்படும் ஹர்த்தால் காலை 6 மணிக்குத் தொடங்கியது. முழு அடைப்பை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெங்களூரில் தனியார் கல்வி நிலையங்கள் இன்று மூடப்பட்டுள்ளன. அரசுப் பாடசாலைகள், கல்லூரிகள், வங்கிகள், அரசு அலுவலகங்கள் இயங்கும் என தெரிவிக்கப்பட்டதால் அவை வழக்கம்போல் இயங்குகின்றன.

பெங்களூரில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் சிவாஜி நகர், அல்சூர், டேனரி சாலை, ஆஸ்டின் டவுன், விவேக் நகர், சிறீராமபுரம் உள்ளிட்ட இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மண்டியா வில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியில்பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த முழு அடைப்பு போராட்டத்துக்கு பெங்களூர் உணவக உரிமையாளர்கள் சங்கம், திரையரங்க உரிமையாளர்கள் சங்கம், விவசாய அமைப்பினர், கன்னட அமைப்பினர் உள்ளிட்ட 150 அமைப்பினர் ஆதரவு தெரிவித்துள்ளனர். பா.ஜ.க, ம.ஜ.த., ஆம் ஆத்மி கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

# உக்ரைன் மக்கள் மீது ரஷ்யா சித்திரவதை!

## ஐ.நா அதிர்ச்சி தகவல்



ரஷ்யா கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ரஷ்யா மேற்கொண்டு வரும் கொடுமைகளால், மக்கள் உயிரிழகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரிவு கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே கடந்த ஓராண்டுக்கும் மேலாக போர் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், சிறப்பு இராணுவ நடவடிக்கை என்ற பெயரில், ரஷ்யா உக்ரைன் மீது தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது.

உக்ரைனும் இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் எதிர்த்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், உக்ரைனின் சில பகுதிகள் ரஷ்ய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்வாறு ரஷ்யா கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ரஷ்யா மேற்கொண்டு வரும் கொடுமைகளால், மக்கள் உயிரிழக் கின்ற னர் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரிவு கண் காணிப்பு அமைப்பு தெரிவித்து இருக் கிறது.

போர் நடைபெற்று வரும் உக்ரைனில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கள் ஆணையம் சார்பில் அமைக்கப்பட்டு இருக்கும் விசாரணை ஆணையத்திற்கு எரிக் மோஸ் தலைமை வகிக்கிறார்.

எரிக் மோஸ் தலைமையிலான குழு ரஷியா ஆக்கிரமித்த உக்ரைன் பகுதி களில் மேற்கொண்டு வந்த ஆய்வுகளில் ரஷ்ய அதிகாரிகளால் நடத்தப்படும் பாதுகாப்பு மையங்களில் கொடுமைப் படுத்தும் சம்பவங்கள் அதிகரித்து இருப்பது தெரியவந்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்ய ஆயுதப்படை மேற்கொண்டு வரும் கொடுமைகள் தொடர்பான ஆதாரங்களை சேகரித்து வருகிறது எரிக் மோஸ் தெரிவித் துள்ளார்.

சில பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கொடுமைகளால் உயிர்பலி ஏற்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது பற்றிய குற்றச் சாட்டுகளை ரஷ்யா முழுமையாக மறுத்து இருக்கிறது.

இது தொடர்பாக ஆணையத்தில் பதில் அளிக்க ரஷ்யாவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு இருந்தது. எனினும், ரஷ்யா தரப்பு அதிகாரி யாரும் ஆணையத்தில் முன்னிலையாகவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது.

---



# உலகின் மிக பெரிய இந்து கோவில் அமெரிக்காவில்

அமெரிக்காவில் கட்டப்படும் உலகி லேயே மிக பெரிய இந்து கோயில் ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி முதல் பொதுமக்களின் தரிசனத்திற்காக திறக்கப்படவுள்ளது என அறிவிக்கப் பட்டுள்ளது.

183 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப் பட்டுள்ள இத்திருக்கோவில் கட்டுமான திருப்பணியில் அமெரிக்காவிலிருந்து 12 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்தியாவிலுள்ள போசசன்வாசி சிறீ அக்ஷர் புருசோத்தம் சுவாமிநாராயன் சன்ஸ்தா எனும் இந்து மத அமைப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள சுவாமி நாராயன் அக்ஷர்தாம் கோவில், பண் டைய இந்திய கலாச்சார முறைப்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிலைகள், இந்திய இசைக்கருவிகள் மற்றும் நடன வடிவங் களின் செதுக்கல்கள் ஆகியவை வடிவ மைக்கப்பட்டுள்ளன.

உலக பாரம்பரிய தளமாக ஐ.நா. கூட்டமைப்பின் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்ட தென்மேற்கு ஆசியாவில் உள்ள கம்போடியா நாட்டின் அங்கோர் வாட் திருக்கோவில், 500 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டது.

நியூ ஜெர்சியின் ராபின்ஸ்வில்லே டவுன்ஷிப் பகுதியில் உருவாக்கப்பட்டு வரும் இந்த அக்ஷர்தாம் திருக்கோவில், அங்கோர் வாட் கோவிலுக்கு அடுத் தபடியாக இரண்டாவது உலகிலேயே மிக பெரிய இந்து கோவிலாகும்.

இந்து மதத்தில் மூலவர் எனப்படும் முக்கிய தெய்வத்தின் விக்கிரகத்தை தவிர, இத்திருக்கோவிலில் 12 விக்கிரகங்கள் உள்ளன. இக்கோவிலில் 9 சுழல் வடிவ கோபுரங்கள் மற்றும் 9 பிரமிடு வடிவ கோபுரங்கள் உள்ளன.